உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# இரட்சிப்பு 1



Compiled by
P. Isaac Chandran

கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர், அவர் எனக்கு இரட்சிப்புமானார்.
சங்கீதம் 118:14

இதோ, தேவனே என் இரட்சிப்பு, நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன், கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர், அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.
ஏசாயா 12:2

கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர். அவர் எனக்கு இரட்சிப்புமானவர். அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன். அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்.
யாத்திராகமம் 15:2

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?
சங்கீதம் 27:1

பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை.

முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன், இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது, இது மாறுவது இல்லையென்கிறார்.
ஏசாயா 45:22,23

நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன். நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன். இரட்சிப்பு கர்த்தருடையது என்றான்.
யோனா 2:9

இஸ்ரவேலோ, கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான், நீங்கள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்.
ஏசாயா 45:17

புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.
லூக்கா 2:30,31,32

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.
ரோமர் 1:16

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.
மத்தேயு 1:21

யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன், வில்லினாலும், பட்டயத்தாலும், யுத்தத்தினாலும், குதிரைகளினாலும், குதிரைவீரரினாலும் நான் அவர்களை இரட்சியாமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன் என்றார்.
ஓசியா 1:7

குன்றுகளையும், திரளான மலைகளையும் நம்புகிறது விருதா என்பது மெய், இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே.
எரேமியா 3:23

அப்பொழுது அன்னாள் ஜெபம்பண்ணி: என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது. என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது. என் பகைஞரின் மேல் என் வாய் திறந்திருக்கிறது. உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன்.
1 சாமுவேல் 2:1

அவரே என் இரட்சிப்பு. மாயக்காரனோ அவர் சந்நிதியில் சேரான்.
யோபு 13:16

கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது, மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.
ஏசாயா 61:10

நீங்கள் சீயோன் குமாரத்தியை நோக்கி: இதோ, உன் இரட்சிப்பு வருகிறது, இதோ, அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது என்று சொல்லுங்கள் என்று, கர்த்தர் பூமியின் கடையாந்தரம்வரைக்கும் கூறுகிறார்.
ஏசாயா 62:11

நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.
ஆபகூக் 3:18

எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார், பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்.
ஏசாயா 52:10

ஆம்! இரட்சிப்பு தேவனாகிய கர்த்தருக்குள் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவே நம் பாவங்களை நீக்கி இரட்சிக்க வல்லவர் முழங்கால் யாவையும் அவருக்கு முன்பாக முடக்கி, நாவால் தேவனை அறிக்கைபண்ணுவோம்

*************************